பாலியர் நேசன்

BALIAR NESAN

தனிப்பிரதி ரூ.10/- ஆண்டுச் சந்தா ரூ.100/- • மலர் 126 | ஆகஸ்ட் 2018 | இதழ் 8

பரமனின் ஒத்தாசை

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின
கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.

சங்.121:2

God's Help

Hi friends,

எல்லாரும் எப்படி இருக்கீங்க? சிறுவர் ஞாயிறெல்லாம் சிறப்பாக கொண்டாடியிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த ஆண்டு நாம் தியானிக்கும் கருத்து “பரமனின் ஒத்தாசை”.

நாம் எல்லாரும் எப்போதும் மற்றவர்களின் உதவி நமக்கு கிடைக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். உதாரணமாக உன்னுடைய Parents, Teachers, Friends எல்லாரும் எப்பவுமே உனக்கு help பண்ணனும் நீ ரொம்ப ஆசைப்படுகிறாய்.உதவி கிடைக்கும்போது மிகுந்த மகிழ்ச்சி அடைகிறாய்.இந்த உலகத்தையும்,நாம் காண்கிற சகலத்தையும் படைத்தவரிடமிருந்து உதவி கிடைக்கும்போது அதுதான் இந்த உலகத்திலே கிடைக்கும் மிகப்பெரிய உதவி.

பொதுவாக நமக்கு கஷ்டம் வரும்போது எங்கிருந்து உதவி வரும்? எப்படி இந்த நோயிலிருந்து, ஆபத்திலிருந்து விடுதலை கிடைக்கும் என்று திகைக்கிறோம்.வாழ்க்கையில் இக்கட்டான சூழ்நிலை வரும்போது இந்த உலகத்தில் எல்லாருமே நம்மை விட்டு விலகி போகலாம். ஆனால், நம்மை உருவாக்கிய ஆண்டவர் ஒருபோதும் கைவிடவே மாட்டார். எல்லாரும் உன்னைவிட்டு விலகிப்போகும்போது தான் அநேக நேரங்களில் ஆண்டவர் உன்கூட இருப்பதை உணரமுடியும்

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் அடிமையாய் இருந்தபோதும், அடிமைத்தனத்தினின்று தப்பி வெகுதூரம் பயணிக்கும்போதும், ஆண்டவர் அவர்கள் கூடவே இருந்தார்.அவர்களுக்கு எல்லாவிதத்திலும் உதவி செய்தார்.

அந்த ஆண்டவர் இன்றும் ஜீவிக்கிறார். இன்றும் நமக்கு உதவி செய்கிறார். சங்.121:2 வசனத்தில் கூறியிருக்கிறபடி “வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்”. கொடிய வறுமையிலோ, தனிமையிலோ, தோல்வியிலோ, என்னால் ஒன்றுமே செய்யமுடியவில்லை என்று எண்ணுகிறாயோ? உன்னை படைத்த ஆண்டவரை உறுதியாய் பற்றிக்கொள். அவர் உனக்கு உதவி செய்வார்.

இந்த மாதம் ஆகஸ்ட் 15 ஆம் நாள் நம் இந்தியா தேசத்திற்கு சுதந்திரம் கிடைத்த நாள். நம் தேசத்திற்காக ஜெபி. குறிப்பாய் நம் நாட்டில் இருக்கும் அனைத்து குழந்தைகளுக்காகவும், குழந்தைகளுக்கு ஏற்படும் வன்முறைகளிலிருந்தும் காக்கப்பட கருத்தாய் ஜெபி. பரத்திலிருந்து ஒத்தாசை வரும். “The best of all is God is with us”.

அன்பும் ஆசீர்வாதமும்
அன்பு அண்ணன்

ஆ.பாக்யராஜ்

Tirunelveli Diocesan Children's Mission
16B, North Highground Road,
CSI Bishopstowe Campus,
Palayamkottai-627 002, Tamilnadu.
Ph: +91 84898 57572
www.baliarnesan.com

விதவையின் வெகுமானம்

கிலேயாத்தின் குடிகளில்ல எலியா என்ற ஒரு தீர்க்கதரிசி இருந்தாங்க. தேசத்திலே மிகவும் கொடியதான பஞ்சம் உண்டாயிருந்தது “ நீ எழுந்து சீதோனுக்குகடுத்த சாறிபாத் ஊருக்குப் போ, அங்க உன்ன பராமரிக்க ஒரு விதவைக்கு கட்டளையிட்டுருக்கேன்” அப்படின்னு கர்த்தர் சொன்னாங்க. உடனே எலியா சாறிபாத் ஊருக்குப் போனாங்க. அப்போ ஒரு விதவை விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாங்க.

எலியா அவங்களப் பார்த்து நான் குடிக்கிறதுக்கு ஒரு பாத்திரத்தில கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா அப்டின்னு சொன்னாங்க. தண்ணீர் கொண்டுவர அவங்க போனப்போ எலியா அவனை கூப்பிட்டு உன் கையில் கொஞ்சம் அப்பமும் கொண்டு வான்னு சொன்னாங்க. அதற்கு அந்த விதவை பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும்தான் இருக்குது. நானும் என் குமாரனும் சாப்பிட்டு செத்துப்போக அந்த உணவை எனக்கும் என்னுடைய குமாரனுக்கும் ஆயத்தப்படுத்த இரண்டு விறகுகளை பொறுக்கிறேன்னு சொன்னாங்க.

உடனே எலியா அவனைப்பார்த்து பயப்படாதே, போய் நீ சொன்னபடியே ஆயத்தப்படுத்து. ஆனா அதில் முதல்ல ஒரு சிறிய அடையை எனக்கு பண்ணிக்கொண்டு வா. பின்பு, உனக்கும் உன்னுடைய குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் தேசத்தில் மழையை கட்டளையிடும் நாள்மட்டும் பானையில் மா செலவழிந்து போவதே இல்லை. கலசத்தில் எண்ணெய் குறைந்து போவதே இல்லை எனவும் கர்த்தர் சொல்லுகிறார்னு எலியா சொன்னாங்க. உடனே அவங்க எலியாவின் சொற்படியே செஞ்சாங்க. அந்த விதவையும், அவங்க குமாரனும் மட்டுமில்லாம அவங்க வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டாங்க. கர்த்தர் எலியா தாத்தாவக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே பானையில் மா செலவழிந்து போகவே இல்ல. கலசத்தின் எண்ணெயும் குறைந்து போகவே இல்ல. இதெல்லாம் நடந்த பிறகு அந்த ஸ்திரீயோட மகன் வியாதியில விழுந்தான். அவனுடைய வியாதி நாளுக்கு நாள் அதிகரிச்சிட்டே இருந்திச்சி. அப்போ இந்த ஸ்திரீ கலங்குனாங்க. உடனே இந்த எலியா என்ன பண்ணுனாங்க தெரியுமா?

அந்த பெண்ணிடம் உன்னோட குமாரன என்னிடத்தில தா அப்டின்னு சொன்னாங்க. அந்த ஸ்திரீ மடியிலிருந்து அந்த மகனை எடுத்து தான் இருந்த மேல்வீட்டுக்கு அவனக்கொண்டுபோயி, தன்னோட கட்டிலிலே வைத்தாங்க. பின்பு அந்த பிள்ளையின் மேல மூன்று தரம் குப்புற விழுந்து பிள்ளையின் ஆத்துமாவ அவனுக்குள்ள திரும்பிவரப்பண்ணும் என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாங்க. கர்த்தர் எலியா சத்தத்தைக் கேட்டாங்க. எவ்ளோ பெரிய ஆச்சரியம் பாத்தியா? திரும்பவும் பிள்ளையோட ஆத்துமா அவனுக்குள்ள வந்தது. அவன் மறுபடியும் பிழைக்கச் செஞ்சாங்க.

அந்த பெண்மனி சிறிய உதவியத்தான் செஞ்சாங்க. ஆனா எவ்ளோ பெரிய நன்மை கிடைச்சிருக்குப் பாத்தியா. எதிர்பார்க்காத இரட்டிப்பான நன்மையைப் பெற்றுக்கொண்டாங்க.

குட்டித் தம்பி, தங்கச்சி நீங்களும் சாறிபாத் விதவையைப் போல உங்களால முடிந்த உதவிய மற்றவர்களுக்கு செய்யனும் சரியா? அப்படி நீ செய்யும்போது ஆண்டவர் நிறைவான பலனை உங்களுக்கும் தருவாங்க. உங்ககூட பள்ளியில், தெருவில் இருக்கும் தேவையுள்ள நண்பர்களுக்கும் உதவிசெய். அப்படி நீயும் உதவி செய்யும்போது உன்னையும் உன் குடும்பத்தையும் ஆண்டவர் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாங்க.

சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மத்தேயு.10:42

S.JESSY MALAR, TDCM

ஊழியர் கூடுகை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் சிறுவர் ஊழியர்கள் குழுவாக கடந்த ஜூலை 23 ஆம் தேதி காலை 8 மணிக்கு அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு, புதியம்புத்தூர் சென்றடைந்தோம். புதியம்புத்தூர் பரி.பவுல் ஆலயத்தில் வைத்து கடந்த கால ஊழியங்களுக்காக நன்றி செலுத்தியும், இப்புதிய கல்வியாண்டின் ஊழியத்திற்கான திட்டங்களை வகுக்கவும் ஆண்டவர் உதவி செய்தார். அங்கிருந்து புறப்பட்டு வட்டக்கோட்டைக்கும், சொத்தவிளை கடற்கரைக்கும் சென்றும் ஆண்டவருடைய படைப்பை கண்டு வியக்க கர்த்தர் உதவி செய்தார். தொடர்ந்து எங்கள் ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தருடைய நாமத்திற்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

K.Blesson, TDCM

தியானம்

M.Merlin, TDCM

1. புதன்: மேலானதை தருபவர் *(ஏசா.52:1-12)*

இழந்தவைகளை எண்ணி கலங்குகிறாயா? தள்ளப்பட்ட நிலைமையில் இருக்கிறேனே என்று வருந்திக் கொண்டிருக்கிறாயோ? கர்த்தர் இந்த நாளிலே உன்னை மகிழப்பண்ணுவார். உனக்கென்று அவர் ஓர் உத்தம இடத்தை வைத்திருக்கிறார்.

2. வியாழன்: ஆறுதல் அளிப்பவர் *(ஏசா.57:1-2)*

தேவனுடைய வார்த்தை உன்னை குணமாக்கி உன் துக்கத்திலிருந்து உனக்கு ஆறுதல் அளித்தது அல்லவா? அதுபோல, துக்கத்திலே வருந்திக்கொண்டிருக்கின்ற உன் நண்பர்களுக்கு நீ ஆறுதலாக இருந்திருக்கிறாயா?இன்று உன்னுடைய வார்த்தை தேற்றுதலின் விதையாக துளிர்விடட்டும்.

3. வெள்ளி: முன் செல்லும் தேவன் *(ஏசா.58:1-14)*

தனிமையில் இருக்கிறேனே என்று பயந்து கொண்டிருக்கிறாயா? என் காரியம் எப்படி நடக்குமோ என்று பதறுகிறாயோ? கலங்காதே, கர்த்தர் உனக்கு முன் சென்று காரியங்களை வாய்க்கச்செய்கிறார்.

4. சனி: தாங்குபவர் *(ஏசா.59:1-21)*

சூழ்நிலைகள் உனக்கு எதிராய் மாறி, துவண்டு போக செய்தாலும் அவர் கிருபை உன்னை என்றும் தாங்கும். கலங்காதே மனுஷரால் மறைக்கப்பட்ட உன் நீதியை தேவன் ஏற்ற வேளையில் வெளிப்படச்செய்வார்

5. ஞாயிறு: கிருபையுள்ள தேவன் *(ஏசா.60:1-22)*

வெற்றியும், செல்வமும் என்னுடைய சாமர்த்தியத்தினாலும், என் திறமையினாலும்வந்தது என்று பெருமைக்கொள்ளாதே. இவையெல்லாம் உன் தேவன் உனக்கு இரங்கி, கிருபையாய் அளித்த ஈவு. அதற்காக அவருக்கு நன்றி செலுத்து.

6. திங்கள்: நேசத்தின் அடையாளம் *(லூக்.9:28-36)*



இவ்வுலகில் உன்னிடத்தில் அன்புக்காட்ட யாரும் இல்லையென்று கண்ணீர் வடிக்கிறாயோ? உன்னை தன் உயிரினும் மேலாய் நேசிக்கின்ற தேவன் உனக்காய் தன் ஜீவனையும் விட்டார் என்பதை மறந்துவிடாதே. அவருடைய அன்புக்கு பாத்திரவானாய் இரு.

7. செவ்வாய்: நித்திய மகிழ்ச்சி *(ஏசா.61,62)*

தோல்விகள் மட்டுமே எனக்கு சொந்தமானது என்று உன்னையே நீ நொந்து கொண்டிருக்கின்ற உன் வாழ்வை கர்த்தருக்கென்று ஒப்புவித்து அவரையே பற்றிக்கொள். வறண்ட உன் வாழ்வை என்றும் மகிழப்பண்ணுவார்.

8. புதன்: தூக்கிச்சுமப்பவர் *(ஏசா.63,64)*

நம்பியவர்களால் தூக்கி எறியப்பட்டு, சஞ்சலத்தினால் வாடிப் புலம்பிக் கொண்டிருக்கின்ற உன் புலம்பலை தேவன் ஆனந்த களிப்பாய் மாறப்பண்ணுவார். நீ தைரியமாயிரு. அவர் உன்னை கைவிடமாட்டார். சோர்ந்து போகாதே.

9. வியாழன்: நன்மையானதை தருபவர் *(ஏசா.65:1-25)*

எல்லாம் முடிந்துவிட்டது, இனி சாத்தியமே இல்லை என்று நீ நினைத்த செயல்களை தேவன் நடத்தி முடிக்கப்போகிறார். அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் இனிக் கேட்கப்படுவதில்லை.கலங்காதே திடன்கொள். இனி தாமதியாது.

10. வெள்ளி: தாய்போல தேற்றுபவர் *(ஏசா.66:1-24)*

எனக்கு இரங்கவும், என்மேல் அன்புகூறவும், உதவவும் மனிதர்கள் இல்லை என்று சொல்லாதே. மனிதர்களின் அன்பைவிட உயர்ந்த உன்னதமான அன்பு இயேசுவின் அன்பு. அந்த அன்பு நேசரைப் பற்றிக்கொள் அவர் உன்னை தேற்றுவார்.

11. சனி: மறவாத தேவன் *(1சாமு.1:1-28)*

வீழ்ச்சிகளை எண்ணி மனம் துவண்டு, வழி தெரியாமல் அலைந்து திரிகின்ற உன் அருகில் இயேசு இருக்கிறார். தாயின் கருவில் உருவாகும் முன்பே உன்னை முன்குறித்தவர் அவரே. அவருடைய சத்தத்திற்கு செவிகொடு. அவர் உன்னை வழிநடத்திச் செல்வார்.

12. ஞாயிறு: நிலையானதை தருபவர் *(1சாமு.2:1-36)*

கண்ணீரின் பாதையில் நடந்து, கானல் நீர் போன்ற நன்மைகளுக்காகக் ஏக்கத்துடன் இருக்கின்ற உன் கண்ணீரை தேவன் காண்கிறார். அவருடைய கரம் நிலையான நன்மைகளை உன்னுடையவைகளாக்கும்.

13. திங்கள்: தரிசனம் தருபவர் *(1சாமு.3:1-21)*

தேவனுடைய மகிமையை காண விரும்பும் நீ அவருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் கைக்கொள். அனுதினமும் அவர் பாதம் அமர்ந்து அவருக்கு காத்திரு. அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார். அவருடைய மகிமையைக் காண்பாய்.

14. செவ்வாய்: ஆர்ப்பரிப்பின் சத்தம் *(1சாமு.4:1-22)*

தேவப்பிள்ளையே உனக்கு விரோதமான காரியங்களை எண்ணி சோர்ந்து போகாதே. கர்த்தர் உனக்காக யுத்தம் செய்யப்போகிறார். மகிழ்ந்து களிகூரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

15. புதன்: பரலோகராஜ்யம் *(லூக்.6:20-26)*

உலக அந்தஸ்து, புகழ், பொருள், பணம் போதும் என்று எண்ணாதே. இவைகளை விட மேலானதை உன் தேவன் உனக்கென்று வைத்திருக்கிறார். அவைகளை சுதந்தரித்துக் கொள்ள நம் இயேசுவின் வழியை பின்பற்றி நட.

16. வியாழன்: வல்லமையுள்ளவர் *(1சாமு.5:1-12)*

ஆலயத்தைக் குறித்தும், வேத வாசிப்பு,ஜெபம் அவைகளைக் குறித்தும் அசட்டையாய் எண்ணங் கொண்டிருக்கிறாயோ? இன்றே மனந்திரும்பு. அவர் நீதியுள்ள நியாதியாதிபதி, வல்லமையுள்ள தேவன் என்பதை உணர்ந்து அவருடைய ஓங்கிய புயத்திற்குள் அடங்கியிரு. அவர் உன்னை ஆதரிப்பார்.

17. வெள்ளி: அறிக்கையிடு *(1சாமு.6:1-21)*

இஸ்ரவேல் ஜனங்கள் பொல்லாத வழியை விட்டு தேவனிடமாய் திரும்பிய போது பெலிஸ்தர்களை முறியடித்தார்கள். நீயும் உன் தப்பிதங்களை அறிக்கையிட்டு அவருடைய வழியில் நடப்பாயானால் உன்னை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வார்.

18. சனி: உதவும் கரம் *(1சாமு.7:1-17)*

உன் அங்கலாய்ப்பை அறிந்து, உன்னை கடந்த மாதம் முழுவதும் காத்து வழிநடத்திய வல்ல தேவனின் கிருபையை எண்ணி நன்றி செலுத்து. சிறுமையும் எளிமையுமான உன் விண்ணப்பங்களை அவர் உற்று கவனித்து உன்னதத்திலிருந்து உனக்கு இரங்குவார்.

19. ஞாயிறு: மனமிரங்கும் தேவன் *(1சாமு.8:1-22)*

நெடுநாளாய் காத்திருந்து சோர்ந்து போனாயோ? உன் விண்ணப்பங்களின் சத்தத்தை பரத்துக்கு நேராய் உயர்த்தி பரம தகப்பனிடம் தெரியப்படுத்து. உன் வேண்டுதல்களைக் கேட்டு உனக்கு பதிலளிப்பார்.

20. திங்கள்: உனக்கான பொக்கிஷம் *(1சாமு.9:1-27)*

முயல் போன்ற உலக வாழ்வில் ஆமை போன்று முன்னேறி என்னுடைய வாய்ப்புகளையும், வெற்றிகளையும் இழந்து விட்டேன் என்று வருந்துகிறாயா? தொடர்ந்து முன்னேறு, உனக்காக உயர்ந்த இடத்தை அவர் வைத்திருக்கிறார். முடிவிலே அது விளங்கும்.

21. செவ்வாய்: உடன் இருப்பவர் *(1சாமு.10:1-27)*

தேவபிள்ளையே நீதி, நியாயத்தை எடுத்துச் சொல்ல ஐயப்படுகிறாயோ? நீ அவர்களுக்கு பயப்படவேண்டாம். உன்னுடன் இருப்பவர் சர்வ வல்லவர். உன் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள். நியாயத்திற்காக துணிந்து செயல்படு. உன் கிரியைக்குத்தக்க பலன் உண்டு.

22. புதன்: இரட்சிப்பின் நாள் *(1சாமு.11,12)*

உன்னை பாவத்திலிருந்து தூக்கி எடுத்து தன்னுடைய இரத்தத்தினால் உன்னை கழுவிச் சுத்திகரித்து, இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்திய தேவன் உன்னுடைய வாழ்வில் அனுதின சாட்சியை எதிர்பார்க்கிறார். இரட்சிக்கப்பட்ட நீ மற்றவர்களை இரட்சிப்பின் வழியில் நடத்த ஆயத்தமா?

23. வியாழன்: பெலப்படுத்தும் தேவன் *(1சாமு.13:1-23)*

மழைத்துளி வாடிய செடிகளுக்கு புதுபெலன் தருவது போல, உன் வாழ்வில் தேவனுடைய வார்த்தை உனக்கு புதுபெலனை தரவல்லது. கழுகைப்போல புதுபெலனை தந்து திரும்ப உன்னை எழும்பச் செய்து உன் செயல்களை உறுதிப்படுத்துவார்.

24. வெள்ளி: உன்னதமானவரின் சமூகம் *(ஆதி.28:10-17)*

சூரியனை நோக்கி திரும்பவும் சூரியகாந்தி பூ நிமிர்ந்து நிற்பது போல அவருடைய சமூகத்தை நோக்கி நீ திரும்பும்போது நீயும் தலைநிமிர்ந்து நிற்கலாம். அவரை விசுவாசி அவர் உனக்குச் சொன்னதை செய்யுமளவும் உன்னை கைவிடமாட்டார்.

25. சனி: விடுதலை தருபவர் *(1சாமு.14:1-24)*

நிலத்தில் போடப்பட்ட விதை தண்ணீர் இல்லையேல் மடிந்துவிடும். உன்னுடைய வாழ்வில் ஜெபம் தண்ணீரைப் போன்று வலிமையானது, உயிர்ப்பிக்கக்கூடியது. விடுதலைக்கான வழி உன் ஜெபத்தில் உண்டு. விடுதலையின் நாள் இதுவே.

26. ஞாயிறு: காண்கின்ற தேவன் *(1சாமு.14:25-52)*

என் நெருக்கத்திலே என்னை கைத்தூக்கி விட ஒருவரும் இல்லை என்று கலங்காதே. அவருடைய கண்கள் உன்னை என்றுமே கண்ணோக்கி கொண்டிருக்கிறது. அவர் உன்னை உள்ளங்கைகளில் வரைந்திருக்கிறார். நலமானதைத் உனக்குத் தருவார்.

27. திங்கள்: கீழ்ப்படிதலுள்ள வாழ்வு *(1சாமு.15:1-35)*

பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் கீழ்ப்படிந்து நடந்தால் வாழ்வில் உயர்வும், மேன்மையும் வரும். அதேபோல கர்த்தருக்கு கீழ்ப்படிந்து அவருடைய சத்தத்திற்கு செவிகொடுத்தால் நித்திய வாழ்வும், ஜீவ கிரீடமும் உனக்கானவைகளாகும். கீழ்ப்படிதலுள்ள வாழ்வை வாழத்தயாரா?

28. செவ்வாய்: சர்வவல்லவரின் நிழல் *(1சாமு.16:1-23)*

உன் நிழல் கூட இருளில் உன்னுடன் வருவதில்லை. ஆனால் உன் நேசர் உன்னோடே கூட இருக்கிறார். அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை.தம்முடைய செட்டைகளின் மறைவில் வைத்து உன்னை பாதுகாக்கிறார். அவருடைய நிழல் உன்னை திகிலுக்கு தூரமாக்கும்.

29. புதன்: விசாரிப்பவர் *(1சாமு.17:1-26)*

நலம் விசாரிப்பது இந்தியர்களின் நற்பண்பு. மனிதர்களின் விசாரிப்பை விட மேலானது நம் இயேசுவின் கரிசனை. அவரே உன் காயங்களை கட்ட வல்லவர். உன்னை குணமாக்கி உன் சுகவாழ்வை துளிர்க்கச் செய்வார். உன் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடு.

30. வியாழன்: யுத்தம் கர்த்தருடையது *(1சாமு.17:27-58)*

பெரிய கோலியாத்தை வீழ்த்தியது, சிறு கூழாங்கல். உன்னுடைய பெரிய பிரச்சனைகளை உன் சிறு ஜெபம் மாற்றவல்லது. பிரச்சனைகளை குறித்து பயப்படாமல் கர்த்தரிடம் ஒப்புவித்துவிடு. அவர் உன்னை பொல்லாதவர்களின் கைக்கு நீக்கித் தப்புவிப்பார்.

31. வெள்ளி: ஞானம் தருபவர் *(1சாமு.17:27-58)*

ஞானமும், வல்லமையும் அவருக்கே உரியது. சிறிய தீக்குச்சியான நீ ஞானம் என்ற வெளிச்சத்தை அவரிடம் கேட்டு பெற்றுக்கொள். அவர் உன்னை அநேகருக்கு முன்பாக பிரகாசிக்கச்செய்வார்.

சாட்சி

Jesus is the one who makes wonder happen. Likewise he made a wonder happen in my life. I was like what will I do after my 12th, what will I be and such. My parents made me join in a NEET class. I went there hopeless. I wrote the exam with great difficulty. I made a promise! I will write testimony and will sacrifice one month to missionary works. He made me to get pass mark and helped me get seat in Saveetha dental college.

PinkyRuskin,Tisayanvilai.

காணிக்கை அனுப்ப

CHEQUE / DD: CSI Tirunelveli Diocese

For Online Transfer:

Bank: Bank of India • SB A/c No: 827020110000283
Branch: Palayamkottai • IFSCode: BKID0008270

குறிப்பு: Online மூலமாக காணிக்கை அனுப்புபவர்கள் உங்கள் மொபைல் எண் அல்லது இ-மெயில் தெரிவித்தால் ரசீது அனுப்ப உதவியாயிருக்கும்.

உள்நாடு :	ஆண்டு சந்தா : ரூ.100/-	ஆயுள் சந்தா : ரூ.1500/-
வெளிநாடு :	ஆண்டு சந்தா : $50	ஆயுள் சந்தா : $500

Tirunelveli Diocesan Children's Mission,
16-B, North Highground Road,
CSI Bishopstowe Campus,
Palayamkottai-627 002, Tamilnadu.
Email: baliarnesan@gmail.com
TDCM Helpline: 8489857572
www.baliarnesan.com

ஆசிரியர்: அருட்திரு. A.பாக்யராஜ்
இணை ஆசிரியர் : திருமதி. ஜூனிதா டேவிட்சன்
இதழ் வடிவமைப்பு : sunshine

காலை, மாலை வாசிக்கவேண்டிய வேதாகம பகுதிகள்

கர்த்தாவே உமது வேதத்திலுள்ள அதிசயங்களைப் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும். ஆமென்

நாள்	காலை பாகம்	மனப்பாட தங்கவசனங்கள்		ஒத்துவாக்கியம்	மாலை பாகம்
1 புதன்	ஏசா.56:1-12	...உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன்,...	5	எபே.6:8	யாத்.36:1-12
2 வியாழன்	ஏசா.57:1-21	...ஆறுதல் அளிப்பேன்.	18	சங்.23:5	யாத்.36:13-24
3 வெள்ளி	ஏசா.58:1-14	...உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்;...	8	சங்.115:12	யாத்.36:25-38
4 சனி	ஏசா.59:1-21	...அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது.	16	ஏசா.60:10	யாத்.37:1-15
5 ஞாயிறு	ஏசா.60:1-22	...ஆனாலும் என் கிருபையினால் உனக்கு இரங்கினேன்.	10	ஏரே.1:19	யாத்.37:16-29
6 திங்கள்	லூக்.9:28-36	...இவர் என்னுடைய நேசக்குமாரன்,...	35	நீதி.11:3	யாத்.38:1-10
7 செவ்வாய்	ஏசா.61,62	...நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும்.	61:7	ஏசா.17:8	யாத்.38:11-20
8 புதன்	ஏசா.63,64	...பூர்வநாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச்சுமந்து வந்தார்.	63:9	உபா.33:27	யாத்.38:21-31
9 வியாழன்	ஏசா.65:1-25	...என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை,...	25	உபா.28:8	யாத்.39:1-11
10 வெள்ளி	ஏசா.66:1-24	...நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்.	13	2தெச.2:17	யாத்.39:12-22
11 சனி	1சாமு.1:1-28	...கர்த்தர் அவளை நினைத்தருளினார்.	19	யோவா.16:27	யாத்.39:23-33
12 ஞாயிறு	1சாமு2:1-36	...அவனுக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன்;...	35	நீதி.24:3	யாத்.39:34-43
13 திங்கள்	1சாமு3:1-21	...கர்த்தர்...தம்மை வெளிப்படுத்தினார்.	21	நீதி.18:10	யாத்.40:1-13
14 செவ்வாய்	1சாமு4:1-22	...இஸ்ரவேலரெல்லாரும் ...மகா ஆர்ப்பரிப்பாய்ச் சத்தமிட்டார்கள்.	5	சங்.85:1	யாத்.40:14-26
15 புதன்	லூக்.6:20-26	...தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது.	20	ஏசா.1:17	யாத்.40:27-38

16	வியாழன்	1சாமு5:1-12	...கர்த்தருடைய பெட்டிக்குமுன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தது;... 3	ஏரே.31:14	1இரா.1:1-10
17	வெள்ளி	1சாமு6:1-21	...கர்த்தருடைய பெட்டியைத் திரும்ப எடுத்துக்கொண்டு போங்கள்... 21	ஏசா.9:2	1இரா.1:11-20
18	சனி	1சாமு7:1-17	...இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவிசெய்தார்... 12	ரூத்.2:12	1இரா.1:21-30
19	ஞாயிறு	1சாமு8:1-22	...அவைகளைக் கர்த்தரிடத்தில் தெரியப்படுத்தினான். 21	மத்.27:66	1இரா.1:31-40
20	திங்கள்	1சாமு.9:1-27	...இதுவரைக்கும் இது உனக்காக வைக்கப்பட்டிருந்தது... 24	ரோம.16:20	1இரா.1:41-53
21	செவ்வாய்	1சாமு.10:1-27	...தேவன் உன்னோடே இருக்கிறார். 7	சங்.17:2	1இரா.2:1-10
22	புதன்	1சாமு.11,12	...இன்று கர்த்தர் இஸ்ரவேலுக்கு இரட்சிப்பை அருளினார் என்றான். 11:13	யோபு.35:8	1இரா.2:11-20
23	வியாழன்	1சாமு.13:1-23	...உம்முடைய ராஜ்யபாரத்தை என்றைக்கும் ஸ்திரப்படுத்துவார். 13	1பேது.1:16	1இரா.2:21-30
24	வெள்ளி	ஆதி.28:10-17	...இது வானத்தின் வாசல் என்றான். 17	உபா.20:3	1இரா.2:31-46
25	சனி	1சாமு.14:1-24	இப்படி கர்த்தர்... இஸ்ரவேலை இரட்சித்தார்;... 23	மாற்:10:16	1இரா.3:1-14
26	ஞாயிறு	1சாமு.14:25-52	...உம்முடைய கண்களுக்கு நலமானபடி செய்யும் என்றார்கள். 40	2நாளா.13:12	1இரா.3:15-28
27	திங்கள்	1சாமு.15:1-35	...கீழ்ப்படிதலும்,... செவிகொடுத்தலும் உத்தமம். 22	1இரா.10:23	1இரா.4:1-11
28	செவ்வாய்	1சாமு.16:1-23	...கர்த்தர் அவனோடேகூட இருக்கிறார் என்றான். 18	உன்.7:6	1இரா.4:12-22
29	புதன்	1சாமு.17:1-26	...சுகமாயிருக்கிறீர்களா என்று கேட்டான். 22	சங்44:19.	1இரா.4:23-34
30	வியாழன்	1சாமு.17:27-58	...யுத்தம் கர்த்தருடையது;... 47	எபே.4:31	1இரா.5:1-9
31	வெள்ளி	1சாமு.18:1-30	...தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்;... 14	நீதி.12:1	1இரா.5:10-18

6 - மறுரூப திருநாள்
15 - சுதந்திர தினம்
24 - புனிதர் பர்தொலொமேயு திருநாள்

சாட்சி

எனக்கு ஒரு நல்ல வேலை கிடைத்தால் பாலியர் நேசனுக்கு சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை பண்ணினேன். நான் Prayer பண்ணின மாதிரி எனக்கு ஒரு பெரிய Company-யில் Select ஆகி வேலை கிடைத்தது. அதற்கு இயேசப்பாவுக்கு ஸ்தோத்திரம்.என்னுடைய தம்பி 10th எழுதியிருந்தான். அவனும் 10th-ல் 500க்கு 471 மதிப்பெண் எடுப்பதற்கு இயேசப்பா கிருபை செய்தாங்க. என்னுடைய Sister-க்கு ஒரு குறிப்பிட்ட college-ல் Seat கிடைக்கனும்னு ஜெபம் பண்ணினோம். அந்த college-ல் யாரோட Recommend இல்லாமல் Seat கிடைக்க இயேசப்பா கிருபை செய்தாங்க. மே மாதம் அக்காவுக்கும் தம்பிக்கும் accident ஆனது. அதிலிருந்து பூரண சுகம் கிடைக்க இயேசப்பா கிருபை செய்தாங்க. அக்கா குழந்தைக்கு chicken pox-ல் இருந்து பூரண சுகம் கொடுத்தாங்க. கடந்த மாதம் முழுவதும் கண்மணி போல் காத்துதேவைகளை சந்தித்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

S.மெல்பா, திருநெல்வேலி.

இரண்டு படங்களில் உள்ள வித்தியாசங்களை கண்டுபிடி



எமது புதிய ஆயுட்கால அங்கத்தினர்கள்

A-9515 D.Navis Emi PonArasi.
A-9516 N.Adlin Estelle, D/o.A.Nelson,Korampallam.
A-9517 R.Rabilon Raja S/o.T.Ravi ArulDoss,Zion Malai.
A-9518 S.Jasmine, D/o.R.selvakumar,Thenkalam.
A-9519 I.David Rhenius, S/o.A.Issac Gnanapragasam,Palayamkottai.
A-9520 J.R.Dev Belwin, S/o.B.Jebakumar Rajasekar,Palayamkottai.
A-9521 J.R.Ben Jesswin, S/o.B.Jebakumar Rajasekar,Palayamkottai.
A-9522 S.Sam Vedha Selvam, S/o.S.Samuel Anand,Palayamkottai.
A-9523 S.Stephen,, S/o.S.Samuel Anand,Palayamkottai.
A-9524 S.Merlin Jeba, D/o.R.Selvakumar,Thenkalam.
A-9525 S.Juda Aaron,Palayamkottai.
A-9526 L.Jebastin, S/o.J.Lawrance,Palayamkottai.
A-9527 L.Jenisha, D/o.J.Leslie Prathip Rajakumar,Shanthi Nagar.
A-9528 E.Vijo Kingsly, S/o. P.Ezekiel, Kulavanigarpuram.
A-9529 A.Jenolin Selvarani, D/o.N.Arul Kiruba selvam,Thiruvarur.
A-9530 K.Kevin JeevanRaj, S/o.K.Karthick Raja,Zion Malai.
A-9531 A.Glarindha Deboral, D/o.P.Augutin Jacob,Vallioor.
A-9532 A.Gideon Raj, S/o. P.Augutin Jacob,Vallioor.
A-9533 T.Saron Rajis, S/o.Thanaseelan,Zion Malai.
A-9534 R.Sesiliya, S/o.P.Rajasingh,Zion Malai.
A-9535 E.Jimreeves Joseph, S/o.Rev.G.Emilraj Moses Balasingh,Zion Malai.
A-9536 E.Jasper Precious, S/o.Rev.G.Emilraj Moses Balasingh,Zion Malai.
A-9537 J.Jovin Berinson, S/o.V.Jebakumar,Zion Malai.
A-9538 R.Jalisha, D/o.T.Ravi ArulDoss,Zion Malai.
A-9539 J.Jonah Wilson, S/o.V.Jebakumar,Zion Malai.
A-9540 S.Issac Jai Timothy, S/o.Rev.Soundrapandian,Athisayapuram.
A-9541 C.Jerlin, D/o.,J.Charles, Puliyangudi.
A-9542 N.Jerinsha Rini, D/o.N.Nixon Amos Raja,Vallioor.
A-9543 N.Jebinsha Rini, D/o.N.Nixon Amos Raja,Vallioor.
A-9544 J.Jeya Jovin Samuel,S/o. T.Joel, Zion Malai.
A-9545 P.Joshua, S/o. I.Paul Roosewelt, Chennai.
A-9546 P.Jessica Mabel, D/o. I.Paul Roosewelt, Chennai.
A-9547 C.Gladwin , S/o. S.Christopher Solomon, Trivandram.

தெளிவு

மொபைல் போன் குழந்தைகளையும், குடும்பத்தையும் படுத்தும்பாடு அப்பப்பா. என்னிடம் அநேக பெற்றோர்கள் அவர்கள் குழந்தைகள் பெரியவர்களுடைய மொபைல் பயன்படுத்தி அதற்கு அடிமையாகவே போய்விட்டார்கள் என்று குற்றம் சுமத்துவதுண்டு. அதே நேரத்தில் குழந்தைகளுக்கும் மொபைல் போன் மேலிருக்கும் அதிக ஆசையை மறுக்கவும் முடியாது. ஆனால் முக்கியமான பிரச்சனை மொபைல் போன் பற்றியது அல்ல மொபைல் போன் பயன்பாடு பற்றியது.

கடந்த மாதம் என் உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அப்போது அங்கிருந்த சிறுவன் WhatsApp-ல் பிஸியாக இருந்தான். “என்னடா பண்ற” என்று கேட்டதற்கு பதிலாய், “என் ப்ரண்ட் கூட சண்டை போட்டுகிட்டுருக்கேன், அவன் ஒரு ஷூ வீசினான், நான் நாலு ஷூக்களை வீசிட்டேன்”, சொல்லிக்கொண்டே அவன் WhatsApp-ஐ காட்டினான். அதில் பல ஷூக்களின் படங்கள் அவனுடைய நண்பனுக்குப் பகிரப்பட்டிருந்தது. எனக்குப் பேரதிர்ச்சி! என்னைப் பொறுத்தவரையில் மொபைல் போன் மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு நல்ல கருவி. அதை வைத்து தகவல் தொடர்பு பரிமாற்றம், கல்வி, பணப்பரிமாற்றம், பொழுதுபோக்கு என்று எண்ணற்ற நல்ல காரியங்களை செய்ய முடியும் என்று நம்பியிருந்தேன். ஆனால் இப்போதுதான் முதல்முறையாய் மொபைல் மூலம் ஷூ சண்டை போட முடியும் என்று தெரிந்தது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் அப்பா சொன்னார். “இப்படித்தான் இந்தப் பசங்க இந்த போனை வைத்து பண்ணுகிற கொடுமை தாங்கமுடியவில்லை” என்று. அதே அப்பா இரண்டு வாரம் கழித்து எனக்கு போன் பண்ணினார், “என் மொபைல் போனுக்கு ஏதோ லாட்டரி விழுந்திருக்குதுன்னு மெசேஜ் வந்திருக்கு அதை எப்படி கலெக்ட் பண்ணன்னு சொல்லு” என்றார். எனக்கு சிரிப்பு வந்தது. அவரிடம் சொன்னேன் “அது பொய் செய்தி உங்களை ஏமாத்தி பணம் பறிக்க அனுப்பியிருக்காங்க” என்று, கவலையோடு போனை வைத்தார்.

மொத்தத்தில் மொபைல் போன் நம் முழுக்குடும்பத்தையும் குழப்பிக் கொண்டிருப்பது தெளிவாய் தெரிகிறது. மொபைல் போனிற்கு அடிமையான சந்ததி; அதில் வருகின்ற செய்திகளையெல்லாம் நம்பும் பெற்றோர் இருவருமே தெளிவாக வேண்டும். மொபைல் போன் எதற்கு தேவையோ அதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். சண்டை போடவா மொபைல் போன் உருவாக்கப்பட்டது? ஏமாற்றவும், ஏமாறவுமா இக்கருவியைக் கண்டுபிடித்தனர்? “தெளிந்த புத்தியுள்ளவர்களாயுமிருங்கள்”. ஏதேன் தோட்டத்து ஜீவ விருட்சம் பார்க்க நன்றாயிருக்கும்; சுவைத்தால் வாழ்வைக் கெடுக்கும்.

- APJ

TDCM வழங்கும் சின்ன மனசில

JTK TV - யில்

உலகின் எப்பக்கத்திலிருந்தும்
JTK-TV நிகழ்ச்சிகளைக் காணலாம்...

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் மாலை 6 முதல் 6:30 வரை
குடும்பத்துடன் பார்த்து தேவ ஆசீர்வாதம் பெற்றிடுவீர்

குழப்பமான உலகில் இயேசுவே நம் வழி



தேடு, கண்டுபிடி

1. யூத ஜனங்களின் சத்துரு யார்?
2. எஸ்தர் யாரை ஆமானின் அரமனைக்கு அதிகாரியாக வைத்தாள்?
3. ஆமானின் குமாரர்கள் எத்தனை பேர்?
4. எஸ்தர் யார் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டாள்?
5. வாசல்காக்கிற ராஜாவின் பிரதானிகள் பெயர் என்ன?
6. __________ மாதம், பன்னிரெண்டாம் மாதம்.
7. யூதரை அழிக்கும்படி ஆமான் நியமித்த பணம் எவ்வளவு?
8. யூதரானவர்கள் யாரை மேற்கொள்ளும்படிக்குக் காரியம் மாறுதலாய் முடிந்தது?
9. மொர்தெகாய் எங்கே பொரியவனாயிருந்தான்?
10. அபியாயேலின் குமாரத்தி யார்?

விடைகளை எஸ்தர் புத்தகத்திலிருந்து தேடி கண்டுபிடித்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு 2018 செப்டம்பர் முதல் தேதிக்குள் அனுப்புங்கள்

TDCM
16B, North Highground Road, CSI Bishopstowe Campus,
Palayamkottai-627 002.

பாலர் ஞாயிறு

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த 29-7-2018 அன்று திப்-மீனாட்சிபுரம் சேகரம் அடைக்கலநாதர் ஆலயத்திலும், சீயோன் மலை சேகரம் தூய இம்மானுவேல் ஆலயத்திலும், கீழச்சுரண்டை சேகரம் பரி. பவுலின் ஆலயத்திலும் பாலர் ஞாயிறு ஆசரிக்க ஆண்டவர் கிருபை செய்தார். பிள்ளைகள் தங்களுடைய தாலந்துகளை வெளிப்படுத்தி, ஆண்டவருடைய நாமத்தை மகிமைப்படுத்தினர்.

A.Esther, TDCM

திருவசன ஊழியம்

5-8-18 பாடுகளை ஏற்றுக்கொள்பவரே கிறிஸ்தவர் பேதுரு.4:13

கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.

12-8-18 கிறிஸ்துவுடன் உயிர்ப்பு கொலோ.2:12

ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மாரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.

19-8-18 கிறிஸ்துவின் தியாக பலியே நற்கருணை யோவான்6:51

நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம், இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான் நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்.

26-8-18 பல்சமய சூழலில் மனிதநேயத்தையும் விசுவாசத்தையும் பகிர்தல் மத்தேயு.22:10

அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள்.கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது.

05.08.2018 SHARING GOD'S PAIN

BUT REJOICE IN SO FAR AS YOU ARE SHARING CHRIST'S SUFFERINGS, SO THAT YOU MAY ALSO BE GLAD AND SHOUT FOR JOY WHEN HIS GLORY IS REVEALED 1PETER 4 : 13

12.08.2018 RISING UP WITH CHRIST

WHEN YOU WERE BURIED WITH HIM IN BAPTISM, YOU WERE ALSO RAISED WITH HIM THROUGH FAITH IN THE POWER OF GOD, WHO RAISED HIM FROM THE DEAD. COLOSSIANS 2 : 12

19.08.2018 SACRAMENT OF HOLY SACRIFICE

I AM THE LIVING BREAD THAT CAME DOWN FROM HEAVEN. WHOEVER EATS OF THIS BREAD WILL LIVE FOR EVER; AND THE BREAD THAT I WILL GIVE FOR THE LIFE OF THE WORLD IS MY FLESH.

JOHN 6 : 51

26.08.2018 PLURALITY COMMON HUMANTITY AND FAITH SHARING

THOSE SLAVES WENT OUT INTO THE STREETS AND GATHERED ALL WHOM THEY FOUND, BOTH GOOD AND BAD; SO THE WEDDING HALL WAS FILLED WITH GUESTS.

MATHEW 22:10

கூலியின்றி ஊழியம்



உறங்கா நகரமாம் மதுரையில் 1887ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27ம் தேதி பூந்தளிரென ஒரு மிஷனெரி குடும்பத்தில் ஒரு ஆண்மகன் பிறந்தான். ஜெர்மன் மிஷனெரி இரம்மரின் புதல்வி தியோடாராவுக்கும் ஸ்வீடிஷ் மிஷனெரி காரல் ஜேக்கப் சாண்டகிரன் அவர்களுக்கு 6வது மகனாகப் பிறந்தான். 6 வயதில் பாட்டி மற்றும் தாயுடன் ஜெர்மனி சென் எலிசபெத் மே என்பவரின் அரவணைப்பில் வளர்ந்து, தாயின் கொஞ்சலைத் துறந்து மிஷனெரி பணியினிமித்தம் பிரிவினை வாட்ட பள்ளிப்படிப்பை முடித்தார். ஸ்வீடனுக்கு தந்தையால் அனுப்பப்பட்டு தத்துவம், ஆன்மீகம் முதலியன கற்று 21.12.1913 அன்று குருப்பட்டம் பெற்றார்.1914 ம் ஆண்டு ஏப்ரல் 14 அன்று இந்தியாவுக்கு மிஷனெரியாக அர்ப்பணிக்கப்பட்டார். 1915 ல் புறப்பட்டு 1916ல் இந்தியா வந்து சேர்ந்தார். தரங்கம்பாடியிலும் பின் மதுரையிலும் பணிபுரிந்தார். ஹெல்மினா என்னும் செல்வச்சீமாட்டியை மணந்தார். அவருக்கு மிகுந்த வளமும், 7 சொந்தமான கப்பல்களும் இருந்தன. அவர் 1952ல் புற்றுநோயால் மரித்தார்.

தன் செல்வமெல்லாம் தமிழ் மக்களின் வாழ்வுக்கும், ஆலயம் கட்டவும் செலவு பண்ணப்படவும் விரும்பினார். மீண்டும் அதே ஆண்டில் இந்தியா திரும்பி தஞ்சையில் ஊழியம் செய்தார். விருதுநகரில் தமிழ் கற்று தேர்ந்து தமிழில் பிரசங்கிக்கவும், உரையாடவும் செய்தார். கோடை விடுமுறையிலும் கொடைக்கானலில் தமிழ் ஆராதனைகளிலேயே பங்குபெற்றார். தீண்டாமை,சாதிபாகுபாடு இவற்றை வெறுத்து அகற்ற உழைத்தார்.பெரியார், காந்தியடிகள் மற்றும் ஜனாதிபதி வெங்கட்ராமனுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். எளிய பிரசங்கம், எளிய வாழ்க்கை இவையே இவரது வாழ்க்கை. ஒழுக்கம், அன்பு, கரிசனை, ஊழியம் இவையே அவரது சாட்சி. அரைக்கால் சட்டையுடனும் ஹலாய் செருப்புடனும் மாட்டுவண்டி, குதிரைவண்டி, கார், பேருந்து இவற்றை துறந்து கால்நடையாகவே அநேக இடங்களுக்கு சென்றார். ஒதுக்கப்பட்டோரை சபையில் சேர்த்தார். தனிநபர் ஊழியம் நிறைவேற்ற அலைந்து திரிந்து விசாரித்து ஞானஸ்நானம் கொடுத்து அநேகரை ஏசுவின் மந்தையில் சேர்த்தார். ஆசிரியர்களை சபைஊழியம் செய்யவும்,அனுதின ஜெபவழிபாடு செய்யவும் பயிற்றுவித்தார்.

1972ல் அணைக்காடு பகுதியில் வெளிநாட்டுக்காரர் குருவாக வேண்டாம் என்று மக்கள் எதிர்த்தபோது, சம்பளம் வேண்டாம் என்று சொல்லி பணியைத்தொடந்தார். பராபரனுக்குத் தோத்திம் என்று சொல்லி கனம்பண்ண முந்திக்கொள்ளுவார். உவமைகளோடு பேசி பிரசங்கங்களைப் புரிய வைத்தார்.கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொல்லி பிரசங்கம் ஆரம்பிப்பார். திருப்பத்தூர் மருத்துவமனைக்கும், ஜோசப் கண் மருத்துவமனைக்கும் அநேகரை அழைத்துச்சென்று சுகம் பெற செய்தார்.வெகுதூர கிராமங்களுக்கு இரவிலும் சென்று ஆற்றைக் கடந்து, முள்ளில் நடந்து பணிசெய்து, ஒருவர் இருந்தாலும் திருவிருந்து கொடுக்க செல்லுவார். தேவராஜ்யம் விரிவடைய ஆலயங்களைக் கட்டி ஆராதனைக்கூட்டங்களை ஏற்பாடு செய்வார். மாணவ விடுதிகள், காப்பகங்கள் ஏற்படுத்தி அநேக ஏழைகளைக் கற்றுத்தேற வழி செய்தார். ஆடம்பரத்தை துறந்து அதன்சிறு பணத்தையும் சேர்த்து விடுதியில் செலவு செய்தார்.

இவரது அண்ணன் ஜேகன்னாள் சாண்டகிரன் ஒத்தரன் சபையின் 3 வது பேராயர்.ஆனால், எந்த சலுகையும் பெற விரும்பாத இவர் நடந்தே சென்று ஊழியம் செய்தார். அனைத்து தாழ்ந்த சமூகத்தினரையும் அணுகி ஊழியம் நிறைவேற்றி சபையில் சேர்த்தார். ஒருமுறை தன் கப்பலை வரவழைத்து தன் காப்பக சிறுவர்களுக்கு காண்பித்தார். எல்லாருக்கும் உணவு வழங்க ஏற்பாடு செய்தார்

அன்றைய காலகட்டம் ஏழ்மை,வறுமை,பஞ்சம் நிறைந்த காலங்கள்.பால்பவுடர் கோதுமை, சோளமாவு, எண்ணெய் இவற்றை வருவித்து ஏழைகளை போஷித்தார். நேரடியாகவும், தன் நெருங்கிய வட்டத்தினர் மூலமும், ஏன் பின்வாங்கிப்போனவர்களை வைத்தும் ஊழியத்தை நிறைவேற்றுவார்.

இவரது மகிழ்ச்சி, உதவி செய்ய ஓடோடி வருவார், வேலை வாங்கி தருவார், வேலை கொடுப்பார். முயல் போன்ற சாதுவானவர் ஆனால், சிங்கம் போன்ற தைரியசாலி. சர்ப்பம், தேள், மின்னல் இவற்றிலிருந்து தப்பினார். சாராயம் அடித்துள்ளனர். துரோகிகள் கட்டையால் அடித்தனர், சேற்றில் தள்ளினர், மிளகாய்ப்பொடியைத் தூவினர், அவர் உணவில் பல்லியைப் போட்டனர், நாய்களை ஏவினர் சகித்தும் ஊழியத்தை நிறைவேற்றினார். புயலில் மாட்டி ஒருமுறை தோள்பட்டை விழுந்தது, கல்லடி பட்டார், சாணியை கரைத்து தரையில் ஊற்றினர், ஒருமுறை அவர் வேதாகமத்தைக் கிழித்தனர், பெரியம்மை நோயினால் வாடினார். இத்தனை துன்பங்களிலும் ஊழியத்தை விடவேயில்லை. தவறாமல் தன் பரிசுத்தம் காத்து, சாட்சியாய் வாழ்ந்து, தீமிதித்தோரிடம் சுவிசேஷம் சொல்லவே அவர்கள் அவரை தீயில் தள்ளினர். வானிலிருந்து மழைபெய்து காப்பாற்றப்பட்டார்.

மன்னிக்கும் குணம், தாழ்மை, மனஸ்தாபம், அரவணைத்தல், சுவிசேஷ வாஞ்சை. திருடனிடமும் தயவு, சிறுவர்களிடமும் மன்னிப்பு கேட்பது, சிக்கனம், கண்டிப்பு, இவையே அவரது சீரிய பண்புகள். தன்னலம் கருதா தனிப்பெரும் தியாகியான அவர் 1972ம் ஆண்டு ஜீலை மாதம் 30ம் தேதி தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் மரித்து அணைக்காடு லூத்தரன் ஆலயம் முன்னே தமிழ் மண்ணில் பிறந்த ஜெர்மனிய ஸ்வீடிஷ் முத்து அமைதியாய் துயில்கிறது.

அன்புக்குட்டி செல்லங்களே பால் சாண்டகிரன் போல மிஷனெரி பாரம் கொண்டு குருத்துவ அபிஷேகம் பெற்று ஞானஸ்நானம் கொடுக்க ஊழியம் செய்ய பாடுகளை துச்சமாய் நினைக்க திருவிருந்தை தனி நபருக்காயும் அலைந்து திரிந்து வழங்க ஆயத்தமா?

அவர் போல் பேசிட நாவும் அலைந்திட கால்களும் வேண்டுமே. அர்ப்பணிக்க ஆயத்தமா. சுகபோகம் துறந்து சுவிசேஷம் சுமக்க ஆயத்தமா. எங்கே உன் தியாகம்?

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.

மத்தேயு 5:10

Dr. Jeyam Juliet

பரமனின் ஒத்தாசை

கருத்து பாடல்

வா வா குட்டீஸ்
வா வா குட்டீஸ்
இயேசு உன்னை அழைக்கிறாரே - ஹேய்

1. ஆபத்தா, தனிமையா- வா வா வா
வறுமையா, தோல்வியா- வா வா வா
பரத்திலிருந்து ஒத்தாசை வருமே- உனக்கு
பரத்திலிருந்து ஒத்தாசை வருமே - ஹேய் -வா வா

2.இயலாமையில் சோர்வா - வா வா வா
பயணத்தில் பதட்டமா - வா வா வா
ஞானத்தில் குறைவா - வா வா வா
பரத்திலிருந்து ஒத்தாசை வருமே - உனக்கு
பரத்திலிருந்து ஒத்தாசை வருமே - ஹேய் -வா வா

-A.Esther TDCM

சாமுவேல் – தேவனின் வேலைக்காரன்

எல்க்கானா என்ற நல்ல மனிதனுக்கு, விவாகம் பண்ணப்பட்ட அன்னாள், ஒரு நல்ல பெண், அவர்கள் இருவரும் தேவனை வழிபட்டதுமல்லாமல், மற்றவர்களுக்கும் இரக்கம் காண்பித்தார்கள். ஆனால் அன்னாளின் வாழ்கையில் சில குறைபாடு இருந்தது.

அவள் ஒரு குழந்தை பெற ஆசைப்பட்டாள். ஓ! ஒரு குழந்தைக்காக எவ்வளவு ஆசைப்பட்டாள்! அவள் காத்திருந்து ஜெபித்தாள் மற்றும் எதிர்பார்ப்புடன் அதிகமாக காத்திருந்தாள். குழந்தை வரவில்லை.

ஒவ்வொரு வருடமும், தேவனுடைய ஆசிரிப்புக்கூடாரத்திற்கு வழிபடச்சென்றாள். ஒரு வருடம், தனக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தால் அவனை தேவனுடைய ஊழியக்காரனாக நிரந்தமாக கொடுத்துவிடுவதாக தேவனிடம் வாக்குத்தத்தம் பண்ணினாள்.

அன்னாள் ஜெபத்தை வயதான ஆசாரியனான ஏலி பார்த்தான்.

அன்னாளின் உதடு மாத்திரம் அசைந்தது ஆனால் சத்தம் வராததால், அவள் குடித்து வெறித்திருக்கிறாள் என்று அவன் நினைத்தான். ஏலி அவளை திட்டினான்.

ஆனால் அன்னாளோ தனக்கு குழந்தை வேண்டி விண்ணப்பம் பண்ணுவதையும், அவள் செய்த பொருத்தனையையும் ஏலியிடம் சொன்னாள். ‘‘சமாதானத்துடனே போ’’ என்று ஏலி பதிலளித்தான்.

‘‘நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்கு கட்டளையிடுவாராக.’’ ஏலியின் வார்த்தைகள் அன்னாளுக்கு நம்பிக்கையை கொடுத்தது.

கூடிய சீக்கிரத்தில் அன்னாளின் இருதயத்தில் சந்தோஷம் நிறைந்தது. ‘‘தேவன் அவளை நினைத்தருளினார்.’’ மற்றும் அவளுடைய விண்ணப்பத்தை கேட்டார். அவளுக்கும், எல்க்கானாவுக்கும் பிறந்த அழகான குழந்தைக்கு சாமுவேல் என்று பெயரிட்டார்கள். (‘‘சாமுவேலின் அர்த்தம்: தேவனால் கேட்கப்பட்டது’’). ஆனால் அன்னால் தேவனையும் அவருக்கு கொடுத்த வாக்குத்தத்தையும் நினைவு கூறுவாளா?

அன்னாள் ஒவ்வொரு வருடமும் ஆசிரிப்புக் கூடாரத்திற்குப் போவதை நிறுத்திவிட்டாள். அவள் தேவனுக்கு கொடுத்த வாக்குத்தத்தை உடைத்து போட்டாளா?

இல்லை, தேவனுடைய ஆசரிப்புக் கூடாரத்தில் தங்குவதற்கும், ஏலிக்கு தேவனுடைய ஊழியத்திலே உதவி செய்வதற்கும் சாமுவேல் பருவம் தேறிவரக் காத்திருந்தாள். பின்பு ஆசரிப்புக் கூடாரத்திற்கு அவனைக் கொண்டு வந்தாள்.

தேவன் அன்னாளின் உன்னத உத்தம குணத்தை கனப்படுத்தினார். சாமுவேலுக்கு பின் மூன்று ஆண் பிள்ளைகளையும், இரண்டு பெண் பிள்ளைகளையும் கொடுத்தார்.

ஒவ்வொரு வருடமும், அன்னாள் தேவனை வழிபட ஆசரிப்புக் கூடாரத்திற்க்கு சென்றாள். மற்றும் சாமுவேலுக்கு புது சட்டையைத் தைத்து கொண்டு வருவாள்.

தொடரும்...

தேவன் பட்சபாதமுள்ளவரா?

புதிதாக தன்னுடைய வாழ்வில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நல்லவர் என்பதை அறிந்துகொண்ட ராமு அதிகாலையில் தேவனோடு பேசுவான். வேத வார்த்தை மூலம் தேவனும் இவனோடு பேசுவார். வழக்கம் போல் அன்றும் ராமு பரிசுத்த வேதாகமத்தில் ஆதியாகமம் 4 ம் அதிகாரத்தை வாசித்துக் கொண்டிருந் தான் அங்கு ஆண்டவர் ஆபேலுடைய காணிக்கையை ஏற்றுக் கொண்டு காயீனுடைய காணிக்கையை ஏற்றுக் கொள்ள வில்லை என்று வாசித்தான். அது அந்த நாளில் அவனுக்கு சற்று குழப்பத்திற்குள் அழைத்து சென்றது. ஆகவே இன்னொரு தேவ விசுவாசியை அணுகினான். அவர் காயினோ நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். ஆனால் ஆபேலோ தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆகவே தேவன் ஆபேலுடையதை அங்கீகரித்தார் என்றார். அந்த பதில் ராமுவுக்கு திருப்தி அளிக்கவில்லை. நேரே தேவனுடைய பாதத்தில் சென்றான். ஆண்டவரே நீர் பட்சபாதமுள்ளவரோ! இரண்டுபேரும் தங்கள் பிரயாசத்தின் பலனைதானே கொண்டு வந்தார்கள். பின்னே ஏன் நீர் காயினுடையதை அங்கிகரிக்க வில்லை என்று அவரிடத்தில் வினாவிக்கொண்டிருந்தான்.

ராமு பதில் கிடைக்காதவனாக ஒரு மரத்தடியில் உட்கார்ந்து ஏதாவது பதில் கிடைக்குமா என்று அண்ணாந்து வானத்தை பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்த மரத்தில் காக்கை குஞ்சின் சத்தத்தைக் கேட்டு அதை உற்றுப்பார்த்தான்.

ஒரு தாய் பறவை ஒரு குஞ்சை மிதித்து மற்றொரு குஞ்சுக்கு ஆகாரம் கொடுத்துக்கொண்டிருந்த காட்சியை பார்க்க நேரிட்டது. வியப்போடு பார்த்தான். ஆகா! தாய்ப் பறவையும் பட்சபாதம் காட்டுகிறதா என்று வியந்தான். சற்று ஆழமாக பார்த்தான்..... பார்த்தான்........ பார்த்துக் கொண்டே இருந்தான்.

ஆரம்பத்தில் சற்று அதிருப்தியாக இருந்தாலும் தாய்ப்பறவை இரண்டு குஞ்சுகளுக்கும் ஆகாரம் கொடுத்த பிற்பாடுதான் ராமு கொஞ்சம் கொஞ்சமாக தாய் பறவையை விளங்கிக் கொண்டான்.

இரண்டு பிள்ளைகளும் சண்டைப் போடககூடாது என்று மிகவும் லேசாக அதைப் பிடித்துக்கொண்டு தன் சிறகால் பறந்து கொண்டே ஒரு பறவைக்கு ஆகாரம் கொடுத்து விட்டு பறந்து சென்றது (யதேச்சையாக பார்க்கும்பொழுது தாய்பறவை அதன் மேல் ஏறி நிற்பதைப் போல் தெரியும்). மீண்டும் ஐந்து நிமிடங்கள் கழித்து வந்து அடுத்த பறவைக்கும் அதைப்போல்தான் ஆகாரம் கொடுத்தது.

ஒருவேளை ஒரு பறவைக்கு ஆகாரம் கொடுக்கும்போது மற்ற பறவை பட்சபாதமாக நடக்கிறது என்று நினைக்கலாம். ஆனால் தாயோ அப்படியல்ல, என்று கண்ட ராமு ஒரு தாய் பறவை இப்படி இருக்குமானால் நிச்சயமாக என் ஆண்டவர் பட்சபாதமில்லாதவர் என்று விளங்கிக்கொண்டு வீட்டுக்கு ஓடி சென்று மறுபடியும் ஆதியாகமம் 4ம் அதிகாரத்தை புரட்டி வாசிக்க ஆரம்பித்தான்.

7 ம் வசனத்தில் நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில்படுத்திருக்கும்; என்ற வசனத்தை பார்த்த மாத்திரத்தில் காயீன் தன்னுடைய வாழ்க்கையில் நன்மை செய்யவில்லை, பாவம் அவனுக்குள் வாசம்பண்ணிருந்திருக்கிறது. ஆகவே தான் தேவன் அவன் காணிக்கைகளை அங்கீகரிக்கவில்லை என்பதைக் கண்டான். ஆம்

அருமையானவர்களே!

பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிகநிச்சயம் அல்லவா? மத் 7:11

நடப்பு செய்திகள்

NEWS

பிரதமர் மோடி பதவியேற்றது முதல் 84 வெளிநாடுகளுக்கு பயணம் 1484 கோடி செலவு: மத்திய அரசு தகவல்: நாட்டின் பிரதமராக கடந்த 2014ஆம் ஆண்டு மே மாதம் பதவியேற்றது முதல் 42 முறை மோடி சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அப்போது 84 வெளிநாடுகளுக்கு அவர் சென்றுள்ளார். கடந்த 2015-16ஆம் ஆண்டில் அதிகப்பட்சமாக 24 நாடுகளுக்கு மோடி சென்றுள்ளார். 2016-17ஆம் ஆண்டில் 18 நாடுகளுக்கும், 2017-18ஆம் ஆண்டில் 19 நாடுகளுக்கும் மோடி சென்றுள்ளார். பிரதமர் மோடியின் பயணத்துக்காக கடந்த 2014-15ஆம் ஆண்டில் தனியார் விமானங்களுக்கு ரூ.93.76 கோடியும், 2015-16ஆம் ஆண்டில் ரூ.117 கோடியும்,2016-17ஆம் ஆண்டில் ரூ.76.27 கோடியும்,2017-18ஆம் ஆண்டில் ரூ.99.32 கோடியும் செலவிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்துக்கு எதிரான ஆக்கி இந்திய அணி வெற்றி: நியூசிலாந்து ஆக்கி அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இந்தியா-நியூசிலாந்து அணிகள் இடையிலான முதலாவது ஆட்டம் பெங்களூருவில் நேற்று நடந்தது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இந்திய அணி 4-2 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தை வீழ்த்தியது. இந்திய அணியில் ரூபிந்தர் பால்சிங் 2-வது மற்றும் 34-வது நிமிடத்திலும், மன்தீப்சிங் 15-வது நிமிடத்திலும்,ஹர்மன்பிற்றித் சிங் 38-வது நிமிடத்திலும் கோல் அடித்தனர். நியூசிலாந்து அணி தரப்பில் ஸ்டீபன்ஸ் ஜென்னெஸ் 26-வது மற்றும் 55-வது நிமிடத்தில் பதில் கோல் திருப்பினார்.

செவ்வாய் கிரகத்தில் மிகப்பெரிய ஏரி கண்டுபிடிப்பு:

செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் உயிர் வாழ முடியுமா என்பதை அறிய இது மிகவும் முக்கியம் ஆகும். இந்நிலையில், செவ்வாய் கிரகத்தில். முதல் முறையாக மிகப்பெரிய ஏரி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த 2003-ஆம் ஆண்டு ஐரோப்பிய விண்வெளி ஆய்வு அமைப்பின் விண்கலம் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பப்பட்டது. அதில் உள்ள ராடார் சாதனங்கள், இந்த அரிய கண்டுபிடிப்பை நிகழ்த்தி உள்ளன. இதுபற்றி இத்தாலி ஆராய்ச்சியாளர்கள் எழுதிய ஆய்வறிக்கை, அமெரிக்க விஞ்ஞான பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை, செவ்வாய் கிரகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நீர் ஆதாரங்களில் இதுதான் மிகப்பெரியது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால்,அதில் உள்ள நீரை குடிக்க முடியாது. ஏனென்றால்,பனி படர்ந்த மேற்பரப்புக்கு அடியில் ஒன்றரை கி.மீ.ஆழத்தில் அந்த ஏரி அமைந்துள்ளது. சுமார் 20 கி.மீ. அகலத்தில் ஏரி உள்ளது. செவ்வாய் கிரகத்தின் தென்துருவத்தில் ஏரி இருப்பதால், செவ்வாய் கிரகத்தின் மற்ற பகுதிகளிலும் நீர் இருப்பதற்கும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. அங்கு நுண்ணுயிர்கள் உயிர் வாழக்கூடும் என்ற விவாதத்தையும் இது உருவாக்கி உள்ளது.செவ்வாய் கிரகத்தில் மிகப்பெரிய ஏரி கண்டுபிடிக்கப்பட்டதற்கு விஞ்ஞானிகள் பலர் மகிழ்ச்சி தெரிவித்தள்ளனர்.

பரமனின் ஒத்தாசை

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.

சங்.121:2

1.ஆபத்தில் ஒத்தாசை

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்.

சங்.50:15

2.தனிமையில் ஒத்தாசை

கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து அவனைத் தட்டியெழுப்பி; எழுந்திருந்து போஜனம்பண்ணு; நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான்.

1இராஜா.19:7

3.வறுமையில் ஒத்தாசை

நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார்; தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர்; என் தேவனே, தாமதியாதேயும். சங்40:17

4.தோல்வியில் ஒத்தாசை

அவர் நெரிந்தநாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்.

ஏசா.42:3

5.இயலாமையில் ஒத்தாசை

ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணைநில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்; கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனுஷன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும் என்றான்.

2நாளா.14:11

6.பயணத்தில் ஒத்தாசை

உன் வழிகளிளெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

சங்.91:11

7.ஞானத்தில் ஒத்தாசை

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.

யாக்.1:5

R.N.I. No.: 1278/1957 Regn. No: TVL/030/2015-2017. Date of Publication: 20.07.2018
Posted at: Head Post Office, Palayamkottai on the 22nd of every month.

OUR NEW LIFE MEMBERS

A9541
A.Jerlin

A9542
N.Jerinsha Rini

A9543
N.Jebinsha Rini

A9544
J.Jeya Jovin Samuel

A9545
P.Joshua

A9546
J.Jessica Mabel

A9547
C.Gladwin

A9265
M.Viswa

A9415
D.Navis Emi Pon Arasi

A9516
N,Adlin Estelle

A9383
Rachel

E2618
Rheo Samuel

CHILD LINE 1098 NIGHT & DAY

Published by: Rev. A. Packiaraj, Tirunelveli Diocesan Children's Mission.